**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**அசல் வழக்கு எண்.** 15/2024

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாக்கண்ணு | தொழில் | |
| த/பெ. | அருணாச்சலம் | வயது | 42 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 22.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

15.05.2015 தேதிய என் பெயரில் ஏற்பட்ட பதிவு கிரைய ஆவணத்தின் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாமல் இணையதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்யமுடியாது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலஎண் 131க்கான 27.08.2023 தேதிய புலப்படம் கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலஎண் 131/6A1A சம்மந்தப்பட்ட 18.07.2023 தேதிய பட்டா மாறுதல் உத்தரவு கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண் 8710க்கு என் பெயரில் ஏற்பட்ட கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் மேற்படி சிட்டாவில் கண்ட புலஎண்ணிற்கும் தாவாவில் குறிப்பிட்டுள்ள புலஎண்ணிற்கும் வேறுபாடு இருப்பதாக பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் வா.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**